සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை சட்டக் கல்லூரியின் கல்வியாண்டு 2017 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2016 செப்தெம்பர்**

Competitive Examination for Admission of students to Sri Lanka Law College for Academic year 2017 - September 2016

**(01) மொழித்திறன் (தமிழ்)**
Language Skills (Tamil)

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✳ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.**

....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம்:**

✳ இவ்வினாத்தாள் **08** பக்கங்களில் **38** வினாக்களைக் கொண்டுள்ளது.

✳ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ **எல்லா** வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடை எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலம்** ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 15 | |
| 3 | 16 - 26 | |
| 4 | 27 - 35 | |
| 5 | 36 | |
| 6 | 37 | |
| 7 - 8 | 38 | |
| **மொத்தம்** | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க

● **1** தொடக்கம் **3** வரையான வினாக்களில் பிழையாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லை அடையாளம் கண்டு அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

1. (1) முதநூல் (2) தகராறு (3) விளக்கமறியல் (4) கலவரம் (.........)

2. (1) புனரமைத்தல் (2) உற்சவம் (3) முதுசொம் (4) சுற்றிவழைப்பு (.........)

3. (1) கவனயீர்ப்பு (2) சீவனாம்சம் (3) ஆளுணர் (4) இணையத்தளம் (.........)

*(03 புள்ளிகள்)*

● **4** தொடக்கம் **6** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை நெடுங்கணக்கு அகரவரிசைக்கு ஒழுங்கமைக்கும்போது அதனை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

4. (அ) இசைவு (ஆ) இகழ் (இ) இலகு (ஈ) இருள்
   (1) அ, ஆ, ஈ, இ (2) ஆ, அ, ஈ, இ (3) ஈ, இ, ஆ, அ (4) ஆ, ஈ, இ, அ (.........)

5. (அ) பசுமை (ஆ) நெசவு (இ) மடம் (ஈ) தேர்வு
   (1) அ, ஆ, ஈ, இ (2) ஈ, ஆ, அ, இ (3) ஆ, அ, ஈ, இ (4) ஆ, அ, இ, ஈ (.........)

6. (அ) விலங்கு (ஆ) மைந்தன் (இ) வௌவால் (ஈ) வைகறை
   (1) ஆ, அ, ஈ, இ (2) அ, ஆ, ஈ, இ (3) ஈ, அ, இ, ஆ (4) ஆ, அ, இ, ஈ (.........)

*(03 புள்ளிகள்)*

● **7** தொடக்கம் **9** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களைப் புணர்த்தினால் வரும் புணர்மொழியை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

7. சொல் + நயம்
   (1) சொல்நயம் (2) சொல்னயம் (3) சொன்னயம் (4) சொன்நயம் (.........)

8. கண் + புலன்
   (1) கற்புலன் (2) கண்புலன் (3) கட்புலன் (4) கற்ப்புலன் (.........)

9. பொருள் + நயம்
   (1) பொருணயம் (2) பொருநயம் (3) பொருள்நயம் (4) பொருனயம் (.........)

*(03 புள்ளிகள்)*

● **10** ஆம் வினாவில் மாறியுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தினால் கருத்துள்ள சொல் ஒன்று வரும். **அச்சொல்லை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

10. கா, த், ல், க, த, ண், ணி (....................................)

*(01 புள்ளி)*

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் பிழையாயின் அவற்றை திருத்தி மீண்டும் அதனை சரி செய்து முழுமையான வாக்கியங்களை வினாவின் கீழே தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக. அது சரியாயின் **'சரி'** என மட்டும் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

11. வாழ்க்கையில் வெற்றிபெற விடாமுயற்சியும் புதிய சிந்தனையும் இன்றியமையாதெனப் பெரியோர் கூறுவர்.

.............................................................................................................................

12. திருவள்ளுவர் உலக மகாகவிகள் யாவருள்ளும் உயர்ந்த மகாகவி.

.............................................................................................................................

13. எமது நாட்டில் ஊர்கள் தோறும் கோவில்கள் உண்டு.

.............................................................................................................................

14. அவர்கள் நல்லவர்களாயினும் வல்லவர்கள் அல்லர்.

.............................................................................................................................

15. ஆற்றல், அன்பு என்பது மனிதனிடத்து அமைந்துள்ள தெய்வீக இயல்பாகும்.

.............................................................................................................................

*(05 புள்ளிகள்)*

/பக் 3 ஐப் பார்க்க

- **16** தொடக்கம் **20** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள மரபுச்சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் தரும் சரியான கருத்தைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

16. முகத்திலடித்தல்
    (1) நேருக்கு நேர் மோதுதல் (2) நேருக்கு நேராக நிந்தித்தல்
    (3) நேருக்கு நேர் சவால்விடுதல் (4) வெறுப்புக் காட்டல் (.........)

17. துப்புக் கெட்டவன்
    (1) ஏமாற்றுபவன் (2) வேடதாரி
    (3) ஒன்றுக்குமுதவாதவன் (4) பதற்றமுடையவன் (.........)

18. காலாறுதல்
    (1) நிலைபெறுதல் (2) ஓய்ந்திருத்தல் (3) அசையாது நிற்றல் (4) தாமதித்தல் (.........)

19. வத்திவைத்தல்
    (1) கோள் சொல்லுதல் (2) எதிர்த்துப் பேசுதல்
    (3) அவதூறு பேசுதல் (4) உளவு பார்த்தல் (.........)

20. கையைக் கடித்தல்
    (1) திருடுதல் (2) தவறுவிடுதல் (3) நட்டமடைதல் (4) சண்டையிடுதல் (.........)

*(05 புள்ளிகள்)*

- **21** தொடக்கம் **23** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகள் ஒவ்வொன்றும் தரும் கருத்தினைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக..

21. சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.
    (1) விளக்கு தொடர்ந்தும் எரிய எண்ணெய் அவசியம்.
    (2) திறமை இருப்பினும் ஒருவன் முன்னேற அதிஷ்டமும் வேண்டும்.
    (3) ஒருவரின் ஆற்றல் மேலும் வளர ஊக்குவிப்பு அவசியம்.
    (4) தன்கையே தனக்குதவி என்பதில் நம்பிக்கை வேண்டும். (.........)

22. விரலுக்கு தக்கதுதான் வீக்கம்.
    (1) தகுதிக்கேற்பவே செலவு செய்தல் வேண்டும்.
    (2) மனம் போலத்தான் ஒருவனது வாழ்வு அமையும்.
    (3) கிடைக்க முடியாத ஒன்றிற்கும் ஆசைப்படக் கூடாது.
    (4) பகட்டான வாழ்வு தாழ்வினைத் தரும். (.........)

23. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
    (1) குரு சிறந்தவராக இருந்தால் சீடனும் சிறந்தவனாவான்.
    (2) சிற்றறிவுடையவனும் படிக்கப் படிக்க அறிவு பெறுவான்.
    (3) அறிவிலிகள் கூட புலமையுடையாரது தொடர்பினால் புலமையடைவர்.
    (4) குலவித்தை கற்றும் பெறலாம் கற்காமலும் பெறலாம். (.........)

*(03 புள்ளிகள்)*

- **24** தொடக்கம் **26** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றினதும் ஒத்தகருத்தை தரும் சொல்லைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

24. ஊடாடல்
    (1) ஊடுருவுதல் (2) கலந்து பழகுதல் (3) உரையாடுதல் (4) இரண்டறக் கலத்தல் (.........)

25. கால்கோள்
    (1) தொடக்கம் (2) அழிவு (3) முடிவு (4) தோன்றுதல் (.........)

26. கட்டுக்கோப்பு
    (1) கட்டழகு (2) கட்டுமானம் (3) கட்டமைப்பு (4) கட்டுப்பாடு (.........)

*(03 புள்ளிகள்)*

[பக் 4 ஐப் பார்க்க

● **27** தொடக்கம் **29** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொல் ஒவ்வொன்றினதும் **எதிர்ப்பொருள்** தரும் சொல்லைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

27. பாலர்
(1) இளைஞர் (2) சிறுவர் (3) வாலிபர் (4) விருத்தர் (.........)

28. திண்மை
(1) நொய்ம்மை (2) நுண்மை (3) வலிமை (4) புன்மை (.........)

29. ஐது
(1) விரிவு (2) செறிவு (3) தொகை (4) குவிவு (.........)

*(03 புள்ளிகள்)*

● **30** தொடக்கம் **32** வரையிலான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சொற்களுடன் **பொருந்தாத** சொல்லைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

30. குற்றம்
(1) களங்கம் (2) கறை (3) மாசு (4) மிடி (.........)

31. போர்
(1) அமர் (2) தமர் (3) சமர் (4) செரு (.........)

32. கடல்
(1) வாரிதி (2) ஆரணியம் (3) சாகரம் (4) பரவை (.........)

*(03 புள்ளிகள்)*

● **33** தொடக்கம் **35** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கூட்டம் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தனிச்சொல்லைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

33. கலைப் படைப்பொன்றின் குறைநிறைகளை ஆராய்தல்
(1) கண்டனம் (2) கணிப்பீடு (3) திறனாய்வு (4) நலனாய்தல் (.........)

34. வடமொழியும் தமிழ்மொழியும் கலந்தெழுதுவது
(1) மணிப்பிரவாள நடை (2) செந்தமிழ் நடை (3) மறுமலர்ச்சி நடை (4) வெள்ளை நடை (.........)

35. மனத்து நிகழும் நகை முதலிய எட்டு வகைச் உணர்ச்சிகளையும் பிறர்க்குப் புலப்படுமாறு தோற்றுவித்தல்
(1) மெய்கீர்த்தி (2) மெய்ப்பாடு (3) ஒத்திகை (4) ஒய்யாரம் (.........)

*(03 புள்ளிகள்)*

36. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக விடை தருக.

சட்டத்தின் விஷேடமான பண்பாகச் சட்டத்தின் முறையான செயன்முறை காணப்படுகின்றது. ஆள் எவரும் நிலையானதும் நன்கறிந்ததுமான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படாமல் நீதிமன்றங்களினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படவோ, எதிராக கட்டளையிடப்படவோ முடியாது. சட்டத்திற்கு உரிய செயன்முறையானது மூன்று அடிப்படையான பண்புகளைக் கொண்டுள்ளது. சட்டநடைமுறைகளின் திறந்த தன்மை அவற்றுள் ஒன்றாகும். நீதிமன்றங்கள் பகிரங்கத்தன்மையுடையவை; எவர் வேண்டுமானாலும் அங்கு சென்று நடப்பவற்றைப் பார்க்கவோ, கேட்கவோ, அவதானிக்கவோ முடியும். இது அமைச்சர்கள் மற்றும் பகிரங்க உத்தியோகத்தர்கள் போன்ற ஏனைய தீர்மானம் எடுக்கும் முறைகளிலிருந்து வேறுபடுகின்றது. அரசாங்கம் வெளிப்படையாகவும், வகைசொல்லக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படும் இக்காலகட்டத்தில் நீதிமன்றங்கள் பகிரங்க அமைப்புக்களாக காணப்படுகின்றன. சட்ட நடைமுறையின் மற்றுமொரு அம்சமாவது ஒவ்வொரு தரப்பினரும் தமது வாதத்தை எடுத்துரைப்பதற்கான உரிமையாகும். அவன் அல்லது அவளுக்கு தனது தரப்பை எடுத்துரைப்பதற்கான நியாயமான சந்தர்ப்பம் வழங்கப்பட்டாலே அன்றி எந்தவொரு நபரையும் பாதிக்கும் வகையிலான தீர்ப்பினை வழங்க முடியாது.

மூன்றாவது அம்சமானது நீதிபதியானவர் பக்கச்சார்பற்றவராகக் காணப்பட வேண்டும் என்பதாகும். அத்துடன் அரச நிறுவனங்களில், அரசியல்வாதிகள் அல்லது அலுவலர்கள் தமது தனிப்பட்ட கொள்கை நிகழ்ச்சிகளைக் கொண்டு மக்களின் உரிமைகளைப் பாதிக்கும் வகையிலான முடிவுகளை எடுப்பதைப்போல நீதித்துறை இவ்விடயங்களில் தலையிடுவது இல்லை. உண்மையில், நீதிபதிகளுக்கு இயற்கையான பக்கச்சார்புகளோ, கொள்கை நாட்டங்களோ இல்லை என்று கூறுவதாகாது. அவ்வாறு கேட்பது முட்டாள்தனமானதாகும். சாதாரணமாக நீதிபதியொருவர், குறைந்தபட்சம் அநீதியை விட நீதியின் பக்கமும் பிழையானதை விட சரியானதன் பக்கம் தீயதைவிட நல்லதன் பக்கமும் சார்ந்திருப்பார். ஆனால் நீதிமன்றங்கள் தமக்கு முன்னால் வருகின்ற விடயங்களைப்பற்றி பொதுவாக புறவய நோக்கையே கொண்டிருக்கின்றன. இது சட்ட அறிஞர்கள் கிடைக்கும் பெறுபேற்றைக் காட்டிலும் முறையான நடைமுறைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர் எனும் குற்றச்சாட்டிற்கு இடமளிக்கின்றது. இது தெளிவாக இவ்வாறு இருக்கக்கூடாததுடன் நீதி செலுத்தப்படுவது மட்டுமன்றி நீதி செலுத்தப்பட்டதாக காட்டப்படுதலும் வேண்டும் என்பதனையே சட்டத்தின் முறையான படிமுறை உறுதி செய்கின்றது.

[பக் 5 ஐப் பார்க்க

(i) நீதிமன்றங்களும் அரசின் ஏனைய நிறுவனங்களும் மக்களின் உரிமைகள் பற்றி முடிவுகள் எடுக்கும்போது பின்பற்றும் **இரு வகைப்பட்ட** நடைமுறைகள் யாவை?

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

(ii) எந்தவொரு நபரையும் பாதிக்கும் வகையிலான தீர்ப்பினை எத்தகைய சந்தர்ப்பத்தில் வழங்க **முடியாது**?

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

(iii) நீதிபதிகளிடம் எவ்விதத்திலேனும் பக்கச் சார்புகள் இல்லாதிருக்க வேண்டும் எனக் கூறுவது நியாயமற்றதென்று இந்த ஆசிரியர் எவ்விடயத்தை அடிப்படையாகக் கொண்டு கூறுகிறார்?

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

(iv) சட்டத்திற்கு உரிய செயன்முறை கொண்டிருக்கும் இயல்பான பண்புகளைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

(v) ஆள் எவருக்கேனும் குற்றத் தீர்ப்பளிக்கவோ எவருக்கேனும் எதிராகக் கட்டளையிடவோ நீதிமன்றத்துக்கு வலுவளிக்கும் முன்தேவைகள் யாவை?

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

*(03 × 5 = 15 புள்ளிகள்)*

37. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் சாரம்சத்தை **மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி** எழுதுக. சுருக்கத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக. **சுருக்கத்தின் இறுதியில் நீங்கள் எழுதிய சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.**

சட்டம் "தனியார் சட்டம்" , "பொதுச் சட்டம்" என்று இன்னொரு முறையாகவும் பிரிக்கப்படுகின்றது. குற்றவியற் சட்டம், அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிர்வாகச் சட்டம் என்பன பொதுச் சட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன. பின்னைய இரண்டும் பொது மக்களுடனான உறவு முறைகளுடன் தொடர்புபடுகின்றமையினால் பொதுச் சட்டங்களினுள் உள்ளடக்கப்படுவதனை இலகுவாக விளங்கிக் கொள்ளலாம். உதாரணமாக இருதனிநபர்களுக்கிடையிலான உறவுமுறைகளுக்கு மாறாக தனிநபருக்கும் அரசுக்குமிடையிலான உறவுமுறைகளுடன் தொடர்புபடுகின்றது. குற்றவியல் சட்டத்தில் மற்றவர்களுக்கு எதிராக புரியப்பட்ட தவறு தனிநபரால் புரியப்பட்டாலும்கூட சமுதாயத்தின் மீதான குற்றத்தின் தாக்கங்கள் மிகக் கடுமையானதாகக் கருதப்படுகின்றது. வழமையாக அரசு தவறு புரிபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவர்களைத் தண்டிக்கின்றது. இந்த அம்சத்தின் விளைவாக குற்றவியல் சட்டமானது பொதுச் சட்ட வரையறையினுள் உள்ளடக்கப்படுகின்றது.

[பக் 6 ஐப் பார்க்க

மறுபக்கத்தில் தனிப்பட்ட சட்டமானது தனிநபர்களிடையேயான பிணக்குகளை ஆராய்கின்றது. இவ்வகையானது எல்லாவிதமான குடியியல் விடயங்களையும் உள்ளடக்குகின்றது. தனிப்பட்ட சட்டம் என்பது குடியியல் சட்டத்தின் இன்னுமொரு பதமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இது தனிநபர்களுக்கிடையேயான விடயங்கள் தொடர்பானதாக காணப்பட்டாலும் அரசின் தலையீடு காணப்படுவது இல்லை என்று கொள்ளமுடியாது. இவ்விடயங்களை ஆளும் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் அரசினால் சட்டமாக உருவாக்கப்பட்டவை. அத்துடன் இவை அரசினால் நிறுவப்பட்ட நீதிமன்றங்களின் முன்னால் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் குடியியல் சட்டங்களின் தனிப்பட்ட தன்மையானது, குடியியல் விடயங்கள் தனிப்பட்டவர்களிடையேயானது என்பதன் அடிப்படையில் கொண்டு வரப்பட்டது. பாதிக்கப்பட்ட நபர் யாருடைய செயலால் தான் பாதிக்கப்பட்டாரோ அவர்களின் செயலுக்கு எதிராக வழக்கினை தொடர்கின்றார். அரசு அல்லது அரச முகவர் அல்லது உத்தியோகத்தர்கள் தரப்பினராக இருக்கத் தேவையில்லை. இதற்கு மாறாக குற்றவியல் வழக்குகள், பொதுவாக அரசினால் தொடரப்படுகின்றன. அதேவேளை அரசியலமைப்பு வழக்குகள், நிர்வாகச் சட்ட வழக்குகள் என்பவற்றில் அரசு அல்லது அரச நிறுவனங்கள், அல்லது அரச திணைக்களங்கள் அல்லது அரச ஊழியர்கள் பிரதிவாதிகளாக ஆக்கப்படுகின்றார்கள். அதாவது குடியியல் மற்றும் குற்றவியல் சட்டங்களின் நோக்கங்கள் வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன. குற்றவியல் சட்டமானது குற்றவாளிகளை தண்டிப்பதனை நோக்காகக் கொண்ட அதேவேளை குடியியல் சட்டமானது பாதிக்கப்பட்ட திறத்தவருக்கு நட்டஈடளிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

*(25 புள்ளிகள்)*

38. பின்வரும் தலைப்புக்களில் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **300** சொற்களில் பகுப்பாய்வுக் கட்டுரை ஒன்று எழுதுக.

(i) சமூகத்தின் நிர்வாகம், ஒழுக்கநெறி, உறுதித்தன்மை என்பன சட்டத்தின் இறைமையிலேயே தங்கியுள்ளன

(ii) அறிவு, நல்லொழுக்கம் என்பவற்றிற்கு மேலாக தொழிலை மட்டும் முதன்மைப்படுத்தி நாட்டின் உயர்கல்விக் கொள்கைகளை உருவாக்குவதின் பொருத்தப்பாடு

(iii) போட்டியும் சுயநலமுமே மனித சமூகத்தில் கருத்து மோதல்களையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கின்றன

(iv) இனம், சமயம், மொழி வேறுபாடுகளினால் உலகம் முழுவதும் பரவிவரும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான தந்திரோபாயங்கள்

[பக் 8 ஐப் பார்க்க

(25 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை சட்டக் கல்லூரியின் கல்வியாண்டு 2017 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2016 செப்தெம்பர்**

Competitive Examination for Admission of students to Sri Lanka Law College for Academic year 2017 - Sepember 2016


**(02) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு**
General Knowledge and Intelligence

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✳ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் மற்றும் ஐந்தாம் பக்கங்களிலும் எழுதுக.**

......................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

......................................
நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம்:**

✳ இவ்வினாத்தாள் **12** பக்கங்களில் **100** வினாக்களைக் கொண்டுள்ளது.

✳ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **இரண்டு மணித்தியாலங்கள்** ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ **கணிப்பான்களைப் பயன்படுத்த முடியாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 9 | |
| 3 | 10 - 20 | |
| 4 | 21 - 30 | |
| 5 | 31 - 44 | |
| 6 | 45 - 55 | |
| 7 | 56 - 62 | |
| 8 | 63 - 68 | |
| 9 | 69 - 75 | |
| 10 | 76 - 83 | |
| 11 | 84 - 89 | |
| 12 | 90 - 100 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க

## பகுதி I - பொது அறிவு

- **1** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் உரிய **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரே தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. தற்போது அசையும் அல்லது அசையாத சொத்துக்கள் அல்லது கடன் பற்றிய பிணக்குகள் தொடர்பில் இணக்கப்பாட்டின் அடிப்படையிலான தீர்வின்போது இணக்க சபையொன்றின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள முடிவது அவற்றின் பெறுமதி
   (1) 150 000 ரூபாய்க்கு மேற்படாத சந்தர்ப்பத்திலாகும்.
   (2) 250 000 ரூபாய்க்கு மேற்படாத சந்தர்ப்பத்திலாகும்.
   (3) 400 000 ரூபாய்க்கு மேற்படாத சந்தர்ப்பத்திலாகும்.
   (4) 500 000 ரூபாய்க்கு மேற்படாத சந்தர்ப்பத்திலாகும். (.........)

2. 1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கமைய நிறுவப்படும் அரசியலமைப்புச் சபையில் உத்தியோகபூர்வமாக நியமனம்பெறும் அங்கத்தவர் **அல்லாதவர்** பின்வருவோருள் யார்?
   (1) பிரதம மந்திரி (2) சபாநாயகர்
   (3) நீதி அமைச்சர் (4) எதிர்க்கட்சித் தலைவர் (.........)

3. 2015 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் அடங்கியுள்ள கீழே குறிப்பிடப்படும் அடிப்படைச் சமூக குறிகாட்டிகளுள் 1940 ஆம் தசாப்தத்தின் ஆரம்பந்தொட்டு இந்நாட்டு அரசின்மூலம் பேணப்பட்டுவரும் சமூக நலனோம்பல் வேலைத் திட்டங்களின் பெறுபேறாக, தற்போது காணப்படுகின்ற மிகச் சிறந்த மட்டத்தை அடைந்துள்ள சமூகக் குறிகாட்டி யாது?
   (1) பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு 74.9
   (2) சிசு மரண விகிதம் ஆயிரம் உயிருள்ள பிறப்புகளுக்கு 8.2
   (3) பருமட்டான பிறப்பு விகிதம் ஆயிரம் பேருக்கு 16.0
   (4) சனத்தொகை அடர்த்தி சதுரகிலோமீற்றருக்கு 334 நபர்கள் (.........)

4. தற்போது இந்த நாட்டில் சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களின் எண்ணிக்கை,
   (1) ஏறத்தாழ 1.3 மில்லியனாகும். (2) ஏறத்தாழ 1.5 மில்லியனாகும்.
   (3) ஏறத்தாழ 1.7 மில்லியனாகும். (4) ஏறத்தாழ 1.9 மில்லியனாகும். (.........)

5. பின்வருவனவற்றுள் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு நுகர்வோர் முறைப்பாடுகளை முன்வைக்கக்கூடிய சிறீலங்கா ரெலிக்கொம்மின் உடனடித் தொலைபேசி அழைப்பு எது?
   (1) 1929 (2) 1954 (3) 1956 (4) 1977 (.........)

6. கலாசாரங்களுக்கிடையிலும் இனங்களுக்கிடையிலும் சமயங்களுக்கிடையிலும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக வடமாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள ஒத்திசைவு நிலையம் (Harmony Centre) பின்வரும் எந்த மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது?
   (1) யாழ்ப்பாணம் (2) முல்லைத்தீவு (3) கிளிநொச்சி (4) மன்னார் (.........)

7. 1931 ஆம் ஆண்டின் டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் மூலமாக, இந்த நாட்டின் அரசியல்துறைக்கு அறிமுகம் செய்யப்பட்ட புதிய அம்சம் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
   (1) அரச கழகம் (2) அமைச்சரவை
   (3) சர்வசன வாக்குரிமை (4) நிறைவேற்றுக்குழு முறை (.........)

8. 1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புக்கு அமைய, நிறைவேற்று அல்லது நிருவாகச் செயற்பாடு காரணமாக எவராவதொருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டது தொடர்பான முறைப்பாடு உயர்நீதிமன்றத்துக்கு முறைப்பாடு செய்யப்படவேண்டிய சந்தர்ப்பம் அந்த மீறல் நிகழ்ந்ததில் இருந்து,
   (1) ஒரு மாதத்திற்குள்ளேயாகும். (2) இரண்டு மாதங்களுக்குள்ளேயாகும்.
   (3) மூன்று மாதங்களுக்குள்ளேயாகும். (4) ஆறு மாதங்களுக்குள்ளேயாகும். (.........)

9. பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** சோடி எது?
   (1) என். சண்முகநாதன் - அரசியல் (2) சேர்.ராசிக் பரீட் - கல்வி
   (3) நெவில் சமரக்கோன் - சட்டம் (4) சீ.ஈ. கொடகும்பர - தொல்பொருளியல் (.........)

[பக் 3 ஐப் பார்க்க

10. நீதிமுறை நடவடிக்கையில் விசேட ஜூரிமார் சபை அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த ஜூரிமார் சபையில் அடங்கியிருக்க வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை
(1) மூன்று. (2) ஐந்து. (3) ஏழு. (4) ஒன்பது. (.........)

11. பின்வருவனவற்றுள் இடர் முகாமைத்துவச் சக்கரத்தில் பின்பற்றப்படும் முதலாவது படிமுறை எது?
(1) இழிவளவாக்குதல் (mitigation) (2) முன்னாயத்தம் (preparedness)
(3) துலங்குதல் (response) (4) மீள்நிலையடைதல் (recovery) (.........)

12. சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு அமைய ஆயுள் எதிர்பார்ப்பு 80 இற்கு மேற்பட்ட பெண்களைக் கொண்ட மாவட்டங்கள் **இரண்டும்** யாவை?
(1) கொழும்பும் கம்பஹாவும் (2) களுத்துறையும் மாத்தறையும்
(3) கண்டியும் மாத்தளையும் (4) அம்பாந்தோட்டையும் மொனராகலையும் (.........)

13. 1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின், 13 வது திருத்தத்துக்கு அமைய நிறுவப்பட்ட மாகாண சபையொன்றின் ஆளுநருடைய உத்தியோகபூர்வ கால எல்லை வருடங்களில்
(1) மூன்று. (2) நான்கு. (3) ஐந்து. (4) ஆறு. (.........)

14. பின்வருவனவற்றுள் இலங்கையில் அமைந்துள்ள மிகப்பெரிய குளம் யாது?
(1) கலாவாவி (2) திசாவாவி (3) நுவரவாவி (4) நாச்சாதுவ வாவி (.........)

15. இறுதி மரண சாதனம் எழுதாது இறந்த ஒருவரது சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கையெடுக்க நீதிமன்று மூலமாக நியமிக்கப்படும் நபர் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுவார்?
(1) மரணசாதன தத்துவகாரர் (2) உரிமைத் தத்துவகாரர்
(3) அற்றோணித் தத்துவகாரர் (4) பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் (.........)

16. 1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின், 19 வது திருத்தத்துக்கு அமைய மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பாராளுமன்ற உறுப்பினர்களால் பிரேரணை நிறைவேற்றப்படாது சனாதிபதி மூலம் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு **ஆகக்குறைந்தது** அந்தப் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட நாளிலிருந்து எவ்வளவு காலம் முடிவுற்றிருத்தல் வேண்டும்?
(1) 2 வருடங்கள் (2) 2 வருடங்கள் 6 மாதங்கள்
(3) 4 வருடங்கள் (4) 4 வருடங்கள் 6 மாதங்கள் (.........)

17. "COP 21" எனப்படுவது,
(1) ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான மாநாடு.
(2) (f)பாக் கலகக்காரர்களுடன் கொலம்பியா அரசினால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை.
(3) மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளின் பின்னர் அறிமுகஞ் செய்யப்பட்ட நிலைத்திருக்கும் குறிக்கோள்கள்.
(4) ஐக்கிய அமெரிக்க அரசுகள், கியூபா ஆகியவற்றுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட இரு தரப்பு ஒப்பந்தம். (.........)

18. "எல்லா விலங்குகளிலும் மனிதன் சிறந்த விலங்காவான். சட்டம், நியாயம் ஆகியவற்றிலிருந்து விலகும்போது அவனே மிகக் கேவலமான விலங்காவான். (Man is the noblest of all animals; seperated from law and justice he is the worst animal)" பின்வருவோரில் இந்த பிரபலமான கூற்றை கூறியவர் யார்?
(1) பிளாட்டோ (2) அரிஸ்டோட்டில் (3) பைதகரஸ் (4) கிப்போகிரட்டிஸ் (.........)

19. பின்வருவோரில் தற்போது தனது நாட்டில் அதிக காலம் ஜனாதிபதி பதவியை வகிப்பவர் யார்?
(1) சிரியாவின் அல் அசாத் (2) ரஷ்யாவின் விளடிமீர் புட்டின்
(3) சிம்பாப்வேயின் ரொபேர்ட் முகாபே (4) கியூபாவின் ராவுல் கஸ்ரோ (.........)

20. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சாசனத்திற்கு அமைய, 'சிறுவர்' எனக் கருதப்படுபவர்
(1) 12 வயதிற்கு குறைந்தோர். (2) 14 வயதிற்கு குறைந்தோர்.
(3) 16 வயதிற்கு குறைந்தோர். (4) 18 வயதிற்கு குறைந்தோர். (.........)

/பக் 4 ஐப் பார்க்க

21. 2016 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பினால் பின்வரும் எந்த நோய் இலங்கையில் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது என்று சான்றுப்படுத்தப்பட்டுள்ளது?
(1) மலேரியா (2) போலியோ (3) தொழு நோய் (4) யானைக்கால் நோய் (.........)

22. "மக்னா கார்ட்டா சாசனம்" என்பது எந்த துறை தொடர்பாக சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணமாகும்?
(1) சட்ட ஒழுக்கவியல் (2) சூழற் பாதுகாப்பு
(3) மனித உரிமைகள் (4) ஆயுதப் பரிகரணம் (.........)

23. பின்வருவனவற்றுள் 2016 ஆம் ஆண்டில் உலகில் ஊழல் **குறைந்த** ஐந்து நாடுகளை **இறங்குவரிசையில்** சரியாகக் காட்டுவது எது?
(1) டென்மார்க், நியூசிலாந்து, பின்லாந்து, சுவீடன், நோர்வே
(2) டென்மார்க், நியூசிலாந்து, பின்லாந்து, ஜப்பான், தென்கொரியா
(3) டென்மார்க், நியூசிலாந்து, பின்லாந்து, மலேசியா, சீனா
(4) டென்மார்க், நியூசிலாந்து, பின்லாந்து, ஐக்கிய இராச்சியம், இத்தாலி (.........)

24. "மன்றாய்வு (விசாரணை) நிலையில் (Sub-Judice)" என்ற கோட்பாடு நிறுவப்பட்டிருப்பது,
(1) சட்ட நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்தை இடர்ப்பாடில்லாமல் பிரயோகிப்பதற்காகும்.
(2) சட்ட நீதிமன்றங்களின் மதிப்பையும் நற்பெயரையும் பாதுகாப்பதற்காகும்.
(3) சட்ட நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் முடிந்த பின்னரும் நீதிமன்ற தீர்ப்புக்களை பகிரங்கமாக கலந்துரையாடும் உரிமையைத் தடுப்பதற்காகும்.
(4) ஒரு சட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தினதும் எந்தவொரு அம்சத்தினையும் ஆராய்வதை விலக்குவதற்காகும். (.........)

25. பின்வருவனவற்றுள் அறுபது வீதத்துக்குக் குறையாத வனமூடுகை நாட்டினுள் பேணப்பட வேண்டுமென அரசியலமைப்பில் உள்ளடக்கியுள்ள நாடு யாது?
(1) நேபாளம் (2) பூட்டான் (3) கம்போடியா (4) லாவோஸ் (.........)

26. உலகின் மிகப் பெரிய கைத்தொழில் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புக்காக நிறுவப்பட்டுள்ள G 7 அமைப்பில் உள்ள அனைத்து நாடுகளையும் சரியாகக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?
(1) ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா அரசுகள், ஜேர்மனி, ஜப்பான், சீனா, இந்தியா, பிரான்ஸ்
(2) சீனா, ரஷ்யா, ஐக்கிய அமெரிக்க அரசுகள், ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான்
(3) கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், இத்தாலி, ஐக்கிய அமெரிக்க அரசுகள், ஜப்பான்
(4) ஐக்கிய அமெரிக்க அரசுகள், ரஷ்யா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஜப்பான் (.........)

27. பின்வருபவர்களுள் "Long March to Freedom" எனும் சுயசரிதையை எழுதிய எழுத்தாளர் யார்?
(1) மா ஓ சேதுங் (2) நெல்சன் மண்டேலா
(3) அப்துல் கலாம் (4) மார்ட்டின் லூதர் கிங் (.........)

28. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது "கெஸ்ராபோ பொலிஸ் (Gestapo Police)" இனைக் கொண்டிருந்த நாடு பின்வருவனவற்றுள் எது?
(1) பிரித்தானியா (2) பிரான்ஸ் (3) இத்தாலி (4) ஜேர்மனி (.........)

29. இவற்றுள் உலக சனத்தொகை தொடர்பான **பிழையான** கூற்று யாது?
(1) தற்போதைய மொத்த உலக சனத்தொகை ஏறத்தாழ 7.8 பில்லியன் ஆகும்.
(2) வருடமொன்றுக்கு உலக சனத்தொகையில் 1.3% வளர்ச்சி ஏற்படுகிறது.
(3) ஒவ்வொரு வருடமும் 80 மில்லியன் சிசுக்கள் உலக சனத்தொகையுடன் சேர்கின்றன.
(4) 2100 ஆம் ஆண்டாகும்போது உலக சனத்தொகை 11 மில்லியனைவிட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (.........)

30. 2020 ஆம் ஆண்டில் உலக ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நகரம் எது?
(1) ஏதென்ஸ் (2) சிட்னி (3) டோக்கியோ (4) பீஜிங் (.........)

[பக் 5 ஐப் பார்க்க

● **31** தொடக்கம் **50** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான **விடையைத்** தரப்பட்ட **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

31. இலங்கை அரசினால் முதன்முதலில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு யாது?

..................................................................................................................................................

32. இலங்கையின் நீதிமுறைமையில் ஆட்கொணர்வு மனு ஆணையை பிறப்பிக்க அதிகாரம் கொண்ட நீதிமன்றம் எது?

..................................................................................................................................................

33. இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான பிரதேச செயலாளர் பகுதிகளை கொண்ட நிருவாக மாவட்டம் யாது?

..................................................................................................................................................

34. சர்வதேச சட்டத்தை பல்வகைக் கலாசாரமாக்கி உலக கலாசாரங்களின் ஞானத்தினால் செழுமைபெறச் செய்ய வேண்டுமென்பதை ஆதரிக்கும் தற்போதைய இலங்கை சட்ட அறிஞர் யார்?

..................................................................................................................................................

35. இந்நாட்டின் பிரதம நீதியரசரான முதலாவது இலங்கையர் யார்?

..................................................................................................................................................

36. 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதியில், இலங்கை பொலிஸ் நிறுவப்பட்டு எத்தனை ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன?

..................................................................................................................................................

37. இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் தொடர்பான சாதனைகளுக்கு தேசிய விருது வழங்கும் நிறுவனம் யாது?

..................................................................................................................................................

38. இலங்கையில் வடக்கு - தெற்கு இணக்கப்பாட்டிற்கான செயற்றிட்டம் எனப்படும் ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித்திட்டம் எது?

..................................................................................................................................................

39. இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப அபிவிருத்திக்காக தாபிக்கப்பட்டுள்ள நிறுவனம் எது?

..................................................................................................................................................

40. இலங்கையின் ஆதிவாசிகளின் வாழ்க்கை பற்றி நூல்கள் பலவற்றை எழுதிய இலங்கையின் சத்திர சிகிச்சை வைத்தியர் யார்?

..................................................................................................................................................

41. விவசாய நடவடிக்கைகளுக்கென துளி நீர்ப்பாசனத் தொழினுட்ப முறையை (drip-irrigation) அறிமுகம் செய்த நாடு யாது?

..................................................................................................................................................

42. பெரிய பிரித்தானியாவின் முதலாவது பெண் பிரதம மந்திரி யார்?

..................................................................................................................................................

43. தற்போது உலகில் **மிகக்குறைந்த** மொத்த தேசிய உற்பத்தியைக் கொண்ட நாடு எது?

..................................................................................................................................................

44. தற்போது உலகத்திலுள்ள நாடுகளின் மானுட முன்னேற்றத்தை கணிப்பதற்கு பயன்படுத்தப்படும் மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணை ஐக்கிய நாடுகள் அமைப்பினைச் சேர்ந்த எந்த முகவரமைப்பு அறிமுகப்படுத்தியுள்ளது?

..................................................................................................................................................

/பக் 6 ஐப் பார்க்க

45. மரணதண்டனையை ஒழிக்க வேண்டுமென முனைப்புடன் செயற்படும் சர்வதேச அமைப்பு எது?

..........................................................................................................................................

46. தற்போதுள்ள இந்திய அரசியலமைப்பை ஆக்கியவர் யார்?

..........................................................................................................................................

47. நோபல் பரிசு பெற்றவரும் தற்போது மானுட நலனோம்பல் பணிகளில் ஈடுபடுபவருமான அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி யார்?

..........................................................................................................................................

48. "INTERPOL" எனும் குறுக்கத்தின் மூலம் குறிப்பிடப்படுவது யாது?

..........................................................................................................................................

49. 2015 ஆம் ஆண்டில் ஒரு துளி பெற்றோலியம் கூட இன்றி பகலும் இரவும் பயணத்தில் ஈடுபட்ட முதலாவது விமானத்தின் பெயர் என்ன?

..........................................................................................................................................

50. 2016 ஆம் ஆண்டின் ரியோ ஒலிம்பிக் போட்டியில் எத்தனை நாடுகள் பங்குபற்றின?

..........................................................................................................................................

## பகுதி II - நுண்ணறிவு

- **51** தொடக்கம் **55** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்த இரு சொற்சோடிகள் இரு வெற்றிடங்களுடன் தரப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் சொற்சோடியிடையே காணப்படும் தொடர்புக்கு சமனான தொடர்பொன்று இரண்டாவது சொற்சோடியிடையேயும் காணப்படுவதற்காக தரப்பட்ட வெற்றிடங்கள் இரண்டிலும் இடக்கூடிய இரு சொற்களையும் ஒழுங்குமுறையில் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

51. ............ : இலாபம் : : சிகிச்சை : ............
(1) நட்டம், மருந்து
(2) வர்த்தக சந்தை, வைத்தியசாலை
(3) வர்த்தகம், குணப்படுத்தல்
(4) பணம், நோய் (.........)

52. ............ : துவக்கு : : பரீட்சை : ............
(1) ரவை, தெரிவு செய்தல்
(2) குண்டு, சோதனை
(3) மரணம், கல்வி
(4) யுத்தம், பேனை (.........)

53. ............ : நாள் : : தூரம் : ............
(1) கிழமை, அண்மை
(2) காலம், மைல்
(3) மாதம், சுருக்கம்
(4) வருடம், மீற்றர் (.........)

54. ............ : புத்தகம் : : நீர் : ............
(1) பக்கம், ஆறு
(2) எழுத்து, நீர்த்தாங்கி
(3) வாசித்தல், நீராடல்
(4) வாசிகசாலை, கூசா (.........)

55. ............ : துப்பாக்கி : : கப்பல் : ............
(1) குண்டு, கடல்
(2) ரவை, எண்ணெய்
(3) ஆயுதம், நீர்மூழ்கிக் கப்பல்
(4) துவக்கு, படகு (.........)

[பக் 7 ஐப் பார்க்க

● **56** தொடக்கம் **60** வரையுள்ள வினாக்கள் சட்டம் தொடர்பான பாடநெறியின் இறுதியிலே நிர்வாகச் சட்டம், குடும்பச் சட்டம், காணிச் சட்டம், ஒப்பந்தச் சட்டம் மற்றும் வர்த்தகச் சட்டம் என்ற ஐந்து பாடங்களுக்கான இறுதிப் பரீட்சையிலே நாளொன்றிற்கு ஒரு வேளை என்றவாறு அமையுமாறு குறித்தவொரு கிழமையொன்றின் திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரையிலான ஐந்து நாட்களில் ஐந்து வேளைகளிலே நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள முறை தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

❊ மூன்று நாட்களில் காலை வேளையிலும் இரு நாட்களில் மாலை வேளைகளிலும் பரீட்சை நடாத்தப்பட வேண்டும்.

❊ அடுத்துவரும் இரு நாட்களில் காலை வேளையிலே பரீட்சைகள் நடாத்தப்படமாட்டாது.

❊ நிர்வாகச் சட்டம், குடும்பச் சட்டம் மற்றும் வர்த்தகச் சட்டம் போன்றவற்றிற்குரிய பரீட்சைகள் அடுத்துவரும் மூன்று நாட்களில் நடாத்தப்பட வேண்டும்.

❊ வர்த்தகச் சட்டம் தொடர்பான பரீட்சை நடைபெறவேண்டியது நிர்வாகச் சட்டம் மற்றும் குடும்பச் சட்டம் தொடர்பான பரீட்சைகளின் பின்னராகும்.

❊ நிர்வாகச் சட்டத்திற்கும் குடும்பச் சட்டத்திற்கும் உரிய பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் காணிச் சட்டம் தொடர்பான பரீட்சை நடாத்தப்பட வேண்டும்.

❊ நிர்வாகச் சட்டம் தொடர்பான பரீட்சை மற்றும் காணிச் சட்டம் தொடர்பான பரீட்சை ஆகியவற்றிற்கிடையில் வேறெந்த பரீட்சைகளையும் நடாத்த முடியாது.

இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

56. காணிச் சட்டம் தொடர்பான பரீட்சை காலைவேளையில் நடாத்தப்பட வேண்டுமெனில் குடும்பச் சட்டம் தொடர்பான பரீட்சை நடாத்தப்பட வேண்டியது எப்போதாகும்?
(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன் (4) வெள்ளி (.........)

57. குடும்பச் சட்டம் தொடர்பான பரீட்சை மாலைவேளையில் நடாத்தப்பட வேண்டுமெனில் ஒப்பந்த சட்டம் தொடர்பான பரீட்சை நடாத்தப்பட வேண்டியது எப்போதாகும்?
(1) திங்கள் (2) செவ்வாய் (3) வியாழன் (4) வெள்ளி (.........)

58. வர்த்தகச் சட்டம் தொடர்பான பரீட்சை காலை வேளையில் நடாத்தப்பட வேண்டுமெனின் காலை வேளையில் நடைபெறும் எஞ்சிய **இரு** பரீட்சைகளும் எவை?
(1) ஒப்பந்த சட்டம் மற்றும் நிர்வாகச் சட்டம் (2) ஒப்பந்த சட்டம் மற்றும் காணிச் சட்டம்
(3) நிர்வாக சட்டம் மற்றும் குடும்பச் சட்டம் (4) காணிச் சட்டம் மற்றும் குடும்பச் சட்டம் (.........)

59. நிர்வாகச் சட்டம் தொடர்பான பரீட்சை காலை வேளையில் நடாத்தப்பட்டால் மாலை வேளையில் நடாத்தப்படும் **இரு** பரீட்சைகளும் எவை?
(1) காணிச் சட்டம் மற்றும் ஒப்பந்த சட்டம் (2) குடும்பச் சட்டம் மற்றும் வர்த்தக சட்டம்
(3) குடும்பச் சட்டம் மற்றும் ஒப்பந்த சட்டம் (4) குடும்பச் சட்டம் மற்றும காணிச் சட்டம் (.........)

60. நிச்சயமாக காலைவேளையிலே நடைபெறும் பரீட்சை யாது?
(1) நிர்வாகச் சட்டம் (2) காணிச் சட்டம் (3) ஒப்பந்தச் சட்டம் (4) வர்த்தகச் சட்டம் (.........)

● **61** தொடக்கம் **65** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைக் கண்டு அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

61. குறித்தவொருவர் *A* என்ற இடத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்து வடக்கு திசையை நோக்கி 100 மீற்றர் பயணஞ் செய்து *B* என்ற இடத்தைச் சென்றடைந்தார். மீண்டும் அவர் கிழக்குப் பக்கமாக திரும்பி 50 மீற்றர் பயணஞ் செய்து *C* என்ற இடத்தை அடைந்தார். பின்னர் அவர் தெற்குத் திசைக்கு திரும்பி 50 மீற்றர் பயணஞ் செய்து *D* என்ற இடத்தை சென்றடைந்தார். மீண்டும் அவர் கிழக்குப் பக்கமாக திரும்பி 50 மீற்றர் பயணஞ் செய்து *E* என்ற இடத்தை சென்றடைந்தார். இந்தத் தகவல்களுக்கேற்ப *A, B, C, D, E* என்ற இடங்களுக்கிடையிலான தூரம் தொடர்பான கீழேயுள்ள எந்தக்கூற்று சரியாகும்?
(1) $AE = AB$ (2) $AE = BE$ (3) $AE > BE$ (4) $AE < BE$ (.........)

62. குறித்தவொரு இரகசிய மொழியிலே *DOCTOR* என்பது எழுதிக் காட்டப்படுவது *HSGXSV* என்றவாறாகும். அந்த இரகசிய மொழியிலே *PEN* என்பது எவ்வாறு எழுதிக் காட்டப்படும்?
(1) *TGQ* (2) *LCD* (3) *SIQ* (4) *TIR* (.........)

[பக் 8 ஐப் பார்க்க


63. ◇ , ⊕ , ⊙ , △ என்ற குறியீடுகளில் ஒழுங்குமுறையில் இன்றி ÷ , × , + , − என்ற நான்கு கணித செயற்பாடுகள் வகைக் குறிப்பிடப்படுவது 4 ◇ 2 = 2 , 2 ⊕ 2 = 4 , 6 ⊙ 3 ◇ 1 = 1 மற்றும் 5 ⊕ 2 △ 3 = 13 என்ற சமன்பாடுகள் உண்மையாக இருக்குமாறாகும். அதற்கேற்ப 6 ⊕ 3 ◇ 3 என்பதன் பெறுமானம் என்ன?

(1) 0 (2) 1 (3) 6 (4) 15 (………)

64. குறித்தவொரு கொள்கலன் ஒன்றினுள் ஒரே அளவிலான மஞ்சள், சிவப்பு, நீலம், பச்சை போன்ற நிறங்களிலான 15 பந்துகள் உள்ளன. அந்தப் பாத்திரத்தில் இருந்து எழுமாறாக 8 பந்துகள் எடுக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறைந்த பட்சம் பச்சைநிறப் பந்துகள் மூன்றாவது கிடைக்கிறது. அவ்வாறெனின் அந்தக் கொள்கலனில் இருக்கக்கூடிய பச்சைநிறப் பந்துகளின் **குறைந்தபட்ச** எண்ணிக்கை என்ன?

(1) 3 (2) 5 (3) 10 (4) 12 (………)

65. ஆறு பக்கங்களிலும் நிறம் பூசப்பட்ட கனவுரு வடிவமுடைய மரப் பெட்டியொன்று சிறிய சதுரமுகிகளாக வெட்டி அகற்றப்பட்ட முறையானது கீழேயுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப அதில் ஒரு பக்கம் மட்டும் நிறம் பூசப்பட்ட எத்தனை சிறிய சதுரமுகிகள் உள்ளன?



(1) 12 (2) 16

(3) 24 (4) 64 (………)

● **66** தொடக்கம் **70** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் *A* , *B*, *C* என்றவாறான மூன்று கூற்றுக்களும் அந்தக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு பெறக்கூடியதென எதிர்பார்க்கப்படும் I, II என்றவாறான இரு முடிவுகளும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சில கூற்றுக்கள் பிரயோக ரீதியாக பொய்யாகத் தோன்றினாலும் இங்கு அவற்றை உண்மை எனக் கருத வேண்டும்.

தரப்பட்டுள்ள மூன்று கூற்றுக்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அந்தக் கூற்றுக்களுள்

- ✳ I மற்றும் II என்ற இரு முடிவுகளுக்கும் நிச்சயமாக வரமுடியமெனின் இலக்கம் **1** ஐயும்
- ✳ முடிவு I இற்கு மட்டும் நிச்சயமாக வரமுடியுமெனின் இலக்கம் **2** ஐயும்
- ✳ முடிவு II இற்கு மட்டும் நிச்சயமாக வரமுடியுமெனின் இலக்கம் **3** ஐயும்
- ✳ I அல்லது II போன்ற எந்தவொரு முடிவுக்கும் **வரமுடியாது** எனின் இலக்கம் **4** ஐயும்

ஒவ்வொரு வினாவின் எதிரேயுமுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

66. **கூற்று** : *A*. சில பேனாக்கள் விலை கூடியவையாகும்.
*B*. விலை கூடிய சகலதும் உள்ளூர் உற்பத்திகளாகும்.
*C*. எல்லாப் பென்சில்களும் விலை கூடியவையாகும்.

**முடிவு** : I. உள்ளூர் உற்பத்திகளான பேனாக்கள் உள்ளன.
II. உள்ளூர் உற்பத்திகள் அல்லாத பென்சில்கள் இல்லை. (………)

67. **கூற்று** : *A*. எல்லா லொறிகளிற்கும் வரி அறவிடப்படும்.
*B*. சில கார்களுக்கு வரி அறவிடப்படமாட்டாது.
*C*. எல்லா கார்களும் பேருந்துகளாகும்.

**முடிவு** : I. சில லொறிகள் பேருந்துகளாகும்.
II. வரி அறவிடப்படாத பேருந்துகளும் உள்ளன. (………)

68. **கூற்று** : *A*. எல்லாக் கதவுகளும் யன்னல்களாகும்.
*B*. எல்லா மேசைகளும் யன்னல்களாகும்.
*C*. எல்லாக் கதிரைகளும் மேசைகளாகும்.

**முடிவு** : I. சில யன்னல்கள் கதிரைகளாகும்.
II. சில கதவுகள் மேசைகளாகும். (………)

[பக் 9 ஐப் பார்க்க


69. கூற்று : *A*. எல்லாப் பழங்களும் உள்ளூர் உற்பத்திகளாகும்.
*B*. எல்லாத் தானியங்களும் உள்ளூர் உற்பத்திகளாகும்.
*C*. சில உள்ளூர் உற்பத்திகள் விலை கூடியவையாகும்.

முடிவு : I. சில பழங்கள் விலை கூடியவையாகும்.
II. சில தானியங்கள் பழங்களாகும். (.........)

70. கூற்று : *A*. எல்லா முயல்களும் அழகானவையாகும்.
*B*. கோழிகள் அழகானவை அல்ல.
*C*. சில நரிகள் கோழிகளாகும்.

முடிவு : I. அழகான நரிகளும் உள்ளன.
II. சில நரிகள் முயல்களாகும். (.........)

● **71** தொடக்கம் **75** வரையுள்ள வினாக்கள் குறித்தவொரு வங்கியில் கடமையாற்றும் 25 ஊழியர்களை வகைக் குறிக்கும் பின்வரும் வரிப்படம் மற்றும் அது தொடர்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.




※ இங்கே பெரிய செவ்வகத்தினால் திருமணமான ஊழியர்களும் வட்டத்தினால் ஆண் ஊழியர்களும் சதுரத்தினால் ஆங்கில மொழியில் கடமையாற்றக்கூடிய ஊழியர்களும் முக்கோணியினால் சிரேஷ்ட ஊழியர்களும் வகைக் குறிக்கப்படுகின்றனர்.

※ இந்த வங்கியில் உள்ள ஆங்கில மொழியில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களின் எண்ணிக்கை 8 ஆகும். அவ்வாறே சிரேஷ்ட ஊழியர்கள் அல்லது ஆங்கில மொழியில் வேலை செய்யக்கூடியவர்கள் என்ற தொகுதிக்கு **உரித்தில்லாத** திருமணமான ஊழியர்களின் எண்ணிக்கை 7 ஆகும்.

※ மேலும் இங்கு ஆண் ஊழியர்களின் எண்ணிக்கை 10 உம் திருமணமான பெண் ஊழியர்கள் 12 பேர் கடமையாற்றுகின்றனர்.

※ இந்த வங்கியில் உள்ள எல்லா ஊழியர்களும் திருமணமானவர்கள், ஆண்கள், ஆங்கில மொழியில் வேலை செய்யக்கூடியவர்கள் மற்றும் சிரேஷ்ட ஊழியர்கள் போன்ற தொகுதியில் குறைந்தபட்சம் ஒரு தொகுதிக்காவது உரித்துடையவர்கள்.

※ இங்கு *A, B, C, D, E* என்ற ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்களின் மூலமும் அந்தந்த இடங்களுக்குரிய குறித்த ஊழியர்களின் எண்ணிக்கை வகைக் குறிக்கப்படுகின்றது.

இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்களின் மூலம் வகைக் குறிக்கப்படும் ஊழியர்களின் எண்ணிக்கையைக் கண்டு அந்த **எண்ணிக்கையை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது இலக்கத்தில் மட்டும்** எழுதுக.

71. ***A*** (.................)

72. ***B*** (.................)

73. ***C*** (.................)

74. ***D*** (.................)

75. ***E*** (.................)

[பக் 10 ஐப் பார்க்க

● **76** தொடக்கம் **80** வரையுள்ள வினாக்கள் *P, Q, R, S, T, U* என்ற ஆறுபேர் செய்து கொண்டிருக்கும் தொழில்புலம் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

- ✳ அந்த ஆறுபேரில் இருவர் நீதித்துறையிலும் இருவர் கல்வித் துறையிலும் ஒருவர் நிர்வாகத் துறையிலும் மற்றையவர் வியாபாரத் துறையிலும் தொழில் செய்து கொண்டிருக்கின்றனர்.
- ✳ வியாபாரத் துறையில் தொழில் செய்து கொண்டிருக்கும் *P*, என்பவர் திருமணம் முடித்து இருப்பது கல்வித்துறையில் தொழில்புரியும் *S* என்பவருடனாகும்.
- ✳ *U* என்பவர் செய்யும் தொழில் துறையிலேயே தொழில் செய்து கொண்டிருக்கும் *Q*, என்பவர் திருமண முடித்து இருப்பது நிர்வாகத் துறையில் தொழில் புரியும் ஒருவருடனாகும்.
- ✳ இந்தக் குழுவினருள் *R* உட்பட நான்குபேர் திருமணமுடித்தவர்களாவார்கள்.
- ✳ இந்தக் குழுவிலே பெண்கள் இருவர் மட்டுமே உள்ளனர். இந்த இருவரும் செய்யும் தொழில் துறைக்குரிய தொழிலை செய்யும் வேறெவரும் அந்த ஆறு பேரிடையேயும் இல்லை.

இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

76. கல்வித் துறையிலே தொழில் செய்து கொண்டிருப்பவர் இவர்களுள் யார்?
(1) *Q* (2) *R* (3) *T* (4) *U* (………)


77. திருமணமான ஆண்ணொருவராக இருப்பவர் இவர்களுள் யார்?
(1) *P* (2) *Q* (3) *R* (4) *T* (………)

78. திருமணமான பெண்ணொருவராக இருப்பவர் இவர்களுள் யார்?
(1) *P* (2) *Q* (3) *S* (4) *T* (………)

79. இந்தக் குழுவிலே உள்ள **இரு** பெண்களும் யார்?
(1) *P* மற்றும் *T* (2) *P* மற்றும் *Q* (3) *P* மற்றும் *R* (4) *Q* மற்றும் *T* (………)


80. கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளுள் நிச்சயமாக உண்மையாக இருப்பது எது?
(1) *Q*, என்பவர் திருமணமான பெண்ணாவார். (2) *R*, என்பவர் திருமணமான ஆணாவார்.
(3) *U*, என்பவர் திருமணமாகாத பெண்ணாவார். (4) *T*, என்பவர் திருமணமாகாத ஆணாவார். (………)

● **81** தொடக்கம் **85** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் ஐந்து உருவப் படங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் நான்கு உருவப் படங்கள் குறித்தவொரு பண்பொன்றிற்கேற்ப ஒன்றிற்கொன்று சமனான தொடர்பைக் காட்டுகின்றன. அவ்வாறு சமனான தொடர்பொன்றைக் **காட்டாத** எஞ்சிய உருவைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.


81.

(1) (2) (3) (4) (5) (………)

82.


(1) (2) (3) (4) (5) (………)

83.

(1) (2) (3) (4) (5) (………)

[பக் 11 ஐப் பார்க்க

84. 

(1) (2) (3) (4) (5) (………)

85. 

(1) (2) (3) (4) (5) (………)

● **86** தொடக்கம் **90** வரையுள்ள வினாக்கள் ஆசிரியர் பயிற்சி மேற்பார்வையாளர் ஒருவருக்கு தனது மேற்பார்வை நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு ஏற்பட்டுள்ள முறை தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

✤ குறித்தவொரு ஆசிரியர் பயிற்சி மேற்பார்வையாளர் ஒருவருக்கு கீழேயுள்ள நிபந்தனைகளுக்கு அமையுமாறு விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற மூன்று பாடங்களுக்கும் உரிய பாடங்களை மட்டும் மேற்பார்வை செய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடுவதற்கு ஏற்பட்டிருந்தது.

- ⁕ மேற்பார்வை செய்யப்படும் ஒவ்வொரு நாளிலும் மூன்று பாடங்கள் மேற்பார்வை செய்யப்படவேண்டும்.
- ⁕ 6, 7, 8 ஆந் தரங்களில் குறைந்த பட்சம் இரு தரங்களாவது ஒரு நாளினுள் மதிப்பீட்டிற்காக தெரிவு செய்யப்படவேண்டும்.
- ⁕ மேற்பார்வை செய்யப்படும் ஒவ்வொரு நாளிலேயும் குறைந்த பட்சம் கணித பாடமொன்றும் விஞ்ஞான பாடமொன்றும் மேற்பார்வை செய்யப்படவேண்டும்.
- ⁕ 7 ஆந் தரத்திலே விஞ்ஞான பாடமொன்று மேற்பார்வை செய்யப்படும் நாளொன்றிலே 8 ஆந் தரத்திலே ஒன்றோ அல்லது இரு பாடங்களோ மேற்பார்வை செய்ய வேண்டுமெனின் அது நிச்சயமாக கணித பாடமாக இருக்கவேண்டும்.
- ⁕ 7 ஆந் தரத்திலே கணித பாடமொன்று மேற்பார்வை செய்யப்படும் நாளொன்றிலே எவ்வகையிலும் 8 ஆந் தரத்திலே ஆங்கில பாடமொன்றினை மேற்பார்வை செய்யமுடியாது.

இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

86. மேற்பார்வைக்காக மூன்று தரங்களிலும் பாடத்தை தெரிவு செய்யும் சந்தர்ப்பமொன்றிலே அதில் ஒரு பாடம் 6 ஆந் தரத்தின் கணிதம் எனின் மற்றைய **இரு** பாடங்களாக இருக்க முடிவது இவற்றுள் எதுவாகும்?
(1) 7 ஆந் தர விஞ்ஞானம் 8 ஆந் தர ஆங்கிலம்
(2) 7 ஆந் தர ஆங்கிலம் 8 ஆந் தர கணிதம்
(3) 7 ஆந் தர விஞ்ஞானம் 8 ஆந் தர கணிதம்
(4) 7 ஆந் தர ஆங்கிலம் 8 ஆந் தர ஆங்கிலம் (………)

87. மேற்பார்வைக்காக 8 ஆந் தரத்திலே ஆங்கில பாடமொன்றும் 6 ஆந் தரத்தின் கணித பாடமும் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பமொன்றிலே எஞ்சிய பாடமாக இருக்கக்கூடியது இவற்றுள் எதுவாகும்?
(1) 7 ஆந் தர விஞ்ஞானம் (2) 6 ஆந் தர விஞ்ஞானம்
(3) 8 ஆந் தர கணிதம் (4) 7 ஆந் தர ஆங்கிலம் (………)

88. மேற்பார்வைக்காக மூன்று தரங்களிலும் பாடங்களை தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றிலே மூன்று தரங்களிலும் பாடத்தை தெரிவு செய்யக்கூடிய எத்தனை முறைகள் இருக்கமுடியும்?
(1) 9 (2) 12 (3) 56 (4) 84 (………)

89. மேற்பார்வைக்காக பாடங்களை தெரிவு செய்தலில் **மிகக் குறைந்த** எண்ணிக்கையில் தெரிவு செய்ய முடியுமாய் இருப்பது கீழேயுள்ள எந்த முறையில் தரங்களைத் தெரிவு செய்யும் போதாகும்?
(1) 7 ஆந் தரத்தில் இரண்டும் 8 ஆந் தரத்தில் ஒரு பாடத்தையும் தெரிவு செய்யும் போதாகும்.
(2) 8 ஆந் தரத்தில் இரண்டும் 7 ஆந் தரத்தில் ஒரு பாடத்தையும் தெரிவு செய்யும் போதாகும்.
(3) 6 ஆந் தரத்தில் இரண்டும் 7 ஆந் தரத்தில் ஒரு பாடத்தையும் தெரிவு செய்யும் போதாகும்.
(4) 6, 7, 8 ஆந் தரங்கள் மூன்றிலும் பாடங்களைத் தெரிவு செய்யும் போதாகும். (………)

[பக் 12 ஐப் பார்க்க

90. மேற்பார்வைக்காக இரு 8 ஆந் தரத்திலும் 7 ஆம் தரமொன்றிலும் பாடங்களைத் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பமொன்றிலே மூன்று பாடங்களை மூன்று விடயங்களிலும் தெரிவு செய்யப்படுவதற்கான நிகழ்தகவு யாது?

(1) 1/4 (2) 1/6 (3) 1/8 (4) 1/12 (.........)

● **91** தொடக்கம் **95** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் எண் சோடிகள் நான்கு தரப்பட்டுள்ளன. அதில் மூன்று எண் சோடிகளில் ஆரம்ப எண்ணில் உள்ளடக்கப்பட்டுள்ள இரு இலக்கங்களினை குறித்த கணித செய்கைக்கு உட்பட்டு இரண்டாவது எண் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு அந்த கணித செய்கைக்கு **உட்படாத** எஞ்சிய எண் சோடியைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

91. (1) 63 , 9 (2) 53 , 4 (3) 82 , 36 (4) 71 , 25 (.........)

92. (1) 37 , 58 (2) 26 , 40 (3) 32 , 16 (4) 72 , 53 (.........)

93. (1) 12 , 5 (2) 23 , 14 (3) 34 , 19 (4) 25 , 17 (.........)

94. (1) 21 , 9 (2) 54 , 80 (3) 23 , 25 (4) 16 , 49 (.........)

95. (1) 23 , 9 (2) 31 , 10 (3) 43 , 19 (4) 71 , 50 (.........)

● **96** தொடக்கம் **100** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அந்த **விடையை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது இலக்கத்தில் மட்டும்** எழுதுக.

96. குறித்தவொரு குடும்பமொன்றிலே தந்தையொருவர் தனது ஒரே மகனுக்கு தன்னிடமிருந்த இடத்தில் ¼ பங்கை ஒப்படைத்தார். அந்த இடத்தில் எஞ்சிய பகுதியை அவரது மகள்மார் சகலருக்கும் ஒரே சமனாகப் பகிர்ந்து வழங்கினார். அப்போது மகனுக்கு கிடைக்கும் பகுதியானது மகள் ஒருவருக்கு கிடைக்கும் பகுதியின் மூன்று மடங்காகும் எனின் அந்தக் குடும்பத்திலே எத்தனை மகள்மார் உள்ளனர்?

(..................)

97. 375 பக்கங்களைக் கொண்ட புத்தகமொன்றில் புத்தக இலக்கங்களை இடுவதற்குப் பயன்படுத்தப்படும் மொத்த இலக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(..................)

98. பேனையொன்றின் விலை 25 ரூபாய்களும் பென்சில் ஒன்றின் விலை 15 ரூபாய்களும் ஆகும். மாணவன் ஒருவன் பேனாக்கள் மற்றும் பென்சில்களை விலைக்கு வாங்குவதற்கு செலவழித்த மொத்தப் பணம் 170 ரூபாய்களாகும். அவ்வாறெனில் அவர் விலைக்கு வாங்கிய பேனாக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(..................)

99. குறித்தவொரு குடும்பமொன்றிலே ஒவ்வொரு மகளுக்கும் சகோதரன்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையில் சகோதரிகள் உள்ளனர். அவ்வாறே ஒவ்வொரு மகனுக்கும் சகோதரன்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கு சகோதரிகள் உள்ளனர். அவ்வாறெனின் அந்தக் குடும்பத்திலே இருக்கும் மகள்மார் மற்றும் மகன்மாரின் மொத்த கூட்டுத்தொகை எவ்வளவு?

(..................)

100. 54 730 என்ற எண்ணில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி 70 000 இற்கும் குறைந்த 5 இன் பெருக்கங்களான ஒன்றிற்கொன்று வேறுபட்ட 5 இலக்கங்களை கொண்ட எத்தனை எண்களை அமைக்க முடியும்?

(..................)

* * *